**20.11.2025**

அ.வ.எண்.**583/2014**

<u>பி.சா.**1** சதாசிவம் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

**1. 2**ம் பிரதிவாதி ஆதிலட்சுமி என்பவரை சாட்சியாக இவ்வழக்கில் விசாரணை செய்ய போகிறீர்களா என்றால் தேவைப்பட்டால் விசாரிக்கலாம். தாவாசொத்தின் கிணறு எந்த சர்வே எண்ணில் வருகிறது என்றால் சர்வெ எண் சரியாக ஞாபகமில்லை. **2**ம் வாதிதான் தாவாசொத்தில் பயிர் செய்து வருகிறார்களா என்றால் இல்லை. தாவாசொத்தில் தற்போது பயிர் எதுவும் செய்யவில்லை. வாதி தாவாசொத்தில் நெல் பயிர் விளைவித்து வருகிறார் என்றால் சரியல்ல. சர்வே எண்.**288/1**ல் நான்கு பக்கம் எல்லைகளில் யார் யார் இருக்கிறார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. பத்திரத்தை பார்த்தால்தான் சொல்ல முடியும். நான்கு பக்கமும் நபர்கள் வேறு நபர்களின் நிலம் உள்ளது, ஆனால் எனக்கு தெரியாது.

**2**. சர்வே எண்.**288/1**ல் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் சரியாக ஞாபகமில்லை ஆனால் மொத்த சொத்து **3** ஏக்கர் **69** செண்ட் ஆகும். சர்வே எண்.**288/2**ல் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் எனக்கு தெரியாது. வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் **1**ம் வாதி எனக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் மூலம் நான் **2**ம் வாதிக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். **1**ம் வாதிக்கு சிறிது சிறிதாக பணம் கொடுத்தேன் எப்போது கொடுத்தேன் என்றால் தெரியாது. அவர் கேட்க கேட்க நான்

கொடுத்தேன். எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்ற விவரம் எனக்கு தெரியாது. கிணறு மற்றும் மோட்டார் பம்பு செட் சர்வே எண்.288/1ல் தான் உள்ளது என்றால் கிணறு பம்பு செட் உள்ளது, ஆனால் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று சொல்ல முடியாது.

3. 1ம் வாதி எனக்கு எழுதி கொடுத்ததாக கூறப்படும் பொது அதிகார பத்திரத்தின் சர்வே எண்.288/2ல் தான் கிணறும் பம்பு செட் உள்ளதாக எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பி.சா.ஆ.6ல் உள்ள கிரைய பத்திரத்தில் அதே சர்வே எண்ணில்தான் கிணறு பம்பு செட் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.6 நான் எனது மனைவிக்கு கிரையம் கொடுத்த பத்திரத்தில் எனது மனைவி கிரைய பணம் கொடுத்தாரா என்றால் கொடுத்தார், எவ்வளவு பணம் என்று தெரியாது. பி.சா.ஆ.6 கிரைய பத்திரத்தில் எனது மனைவி எந்த கிரைய பணமும் கொடுக்கவில்லை நானாக ஏற்படுத்தி கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல.

4. 2009ம் வருடம் ஜனவரி மாதம் 1ம் வாதி கோவிந்தசாமி கிணறு தூர் வார்வதற்காக என்னிடம் ரூ.10,000 கடன் பெற்றார் என்றால் இல்லை. நான் கடன் கொடுப்புதாக ஒப்புக் கொண்டு 1ம் வாதியிடமிருந்து அடமானம் பத்திரம் பெற்று அதன்படி 1ம் வாதி சொத்தின் அசல் பத்திரம் அனைத்தும் என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. 1ம் வாதி கோவிந்தசாமிக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரியல்ல. எழுத படிக்க தெரியும். 1ம் வாதிக்கு நான் மருமகன் என்பதால்தான் நான் கொடுத்த

பக்கத்தில் அடமான பத்திரம் என்று கையொப்பம் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி ரூ.10,000 தொகையையும் நான் 1ம் வாதிக்கு கொடுக்காமல்தான் அடமானம் பெற்றேன் என்றால் சரியல்ல.

5. 1ம் வாதி தான் தொடர்ந்து தாவாசொத்தை அனுபவித்து வந்தார் அவர் எந்த காலத்திலும் சொத்தை எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2013ம் வருடம் ஏப்ரல் தாவாசொத்தை விற்பதற்காக நான் ஆட்களுக்கு இடத்தை காட்டினேன், அப்போதுதான் 2ம் வாதிக்கு அடமான பத்திரத்தை தனது அப்பா 1ம் வாதி எழுதி கொடுத்ததை நான் பொது அதிகார பத்திரம் என்று மாறாக உற்பத்தி செய்து கொண்டு எனது மனைவியின் மீது கிரையம் கொடுத்த விவரம் அப்போதுதான் தெரிய என்றால் சரியல்ல. எனவே 1ம் வாதிக்கு எப்போதுமே என் மீது பொது அதிகாரம் எழுதி கொடுக்க நினைத்ததில்லை, அவர் எழுதி கொடுத்த அடமான பத்திரத்தை தான் பொய்யான பொது அதிகார பத்திரம் என்று கூறி சொத்து விற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

6. நான் கூறும் பொது அதிகாரம் பத்திரம் பெற்ற பிறகு நான் தாவாசொத்தை எப்போதுமே அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. வாதிதான் இன்றைய தேதிவரை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரம் எந்த காலத்திலும் நடைமுறைக்கு வரவே இல்லை 1 மற்றும் 2ம் வாதி தான் தாவாசொத்தை தொடர்ந்து அனுபிவத்து வருவதால் மேற்சொன்ன பொது அதிகார பத்திரம் ஊர்ஜீத்திற்கு வரவே இல்லை எனவே அது சட்டபடி ரத்தாகிவிட்டது என்றால் சரியல்ல. நான்

குடியிருந்து வருவது சென்னை, பம்மலில் என்றால் சரிதான். 1ம் மற்றும் 2ம் வாதி தாவா கிராமத்தில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். அதனால் 1ம் வாதி எனக்கு பொது அதிகாரம் எழுதி கொடுக்க அவசியமில்லை என்றால் சரியல்ல. நான் பொது அதிகார முகவராக சொத்தை எந்த காலத்திலும் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொத்தை அபகரிக்க வேண்டும் என்று வாதியின் அறியாமையை பயன்படுத்தி தவறுதலாக எனது மனைவி மீது கிரையம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**7**. நான் உண்மையிலேயே பொது அதிகாரம் பெற்றிருந்தால் தாவாசொத்தின் விவரங்கள் மற்றும் ஐக்குபந்தி விவரங்கள் அனைத்தும் தெரிந்திருக்கும் அவ்வாறு உண்மையிலேயே அதிகாரம் பெறாததால்தான் எனக்கு சொத்தின் விவரங்கள் தெரியவில்லை என்றால் சரியல்ல. எனவே நான் **24.08.2011** தேதியில் எனது மனைவிக்கு நான் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் செல்லாது என்றும் மேலும் வாதியின் அனுபவித்தை இடையூறு செய்ய கூடாது என்று இந்த வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவாசொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது மனைவி பெயரில் உள்ளது. கூட்டு பட்டா மற்றும் தனி பட்டா உள்ளது.

**8**. கூட்டு பட்டா எனது மனைவியின் மீதும் 1ம் வாதியின் மீதும் உள்ளது. நான் எனது மனைவிக்கு கிரையம் கொடுத்த பிறகு கூட்டு பட்டா ஏன் உள்ளது என்றால் நான் அதை மாற்றுவதற்கு நடவடிக்கை

எடுத்துள்ளேன். பட்டா எப்போது எந்த தேதியில் மாற்றப்பட்டது என்றால் 2013ம் வருடம் மாற்றப்பட்டது. பட்டா மாற்றுவதற்கு யார் யாரை விசாரித்தார்கள் என்றால் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாற்றி கொடுத்தார்கள், யாரையும் விசாரிக்கவில்லை. யாரையும் விசாரிக்காமல் வாதிகளையும் விசாரிக்காமல் நான் பட்டா மாற்றிவிட்டேன் என்றால் சரியல்ல. எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.